IntSym 2019
9th International Symposium

# THE FACTORS DETRIMENTAL TO DEVELOPMENT OF SELF EMPLOYMENT OF WOMEN: A STUDY WITH REFERENCE TO OLAITHODUVAI GRAMA NILADHARI DIVISION

**A. Kolosrika[170] & S. Vijayakumar[171]**

Correspondence: vijai114@gmail.com

ABSTRACT

This study titled "the factors detrimental to development of self-employment of women" is carried out on the basis of Olaithoduvai Grama Niladhari Division within the Mannar Divisional Secretariat. 52 self-employed women are used as sample size in this study. The aim of this study is to find out the factors of obstacles affecting the women to engage in self-employment, to encourage women-entrepreneurs in Mannar district, and to find out the reasons why most of the women engage in the traditional employments rather than engaging in the modern employment techniques. In comparison to early time period, the women currently engage in their individual employments. Though the women are physically weaker than the men, they are mentally strengthened. At present, the women tolerate not only the burden of their family but the economic burden of their family as well after their marriage rather than just being domesticated. The self-employment generates the self-confidence of women. The self-employment is an activity which increases the livelihood of women and which alleviates the existing poverty from the women. However, the women engaging in the self-employment activities particularly in the rural areas face the private, family, social, economic and technological challenges to development their self-employment activities.

**Keywords:** self-employment, women, obstacles, modern, tradition

**ஆய்வு சுருக்கம்**

"பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகள்" எனும் ஆய்வானது மன்னார் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவினை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வானது சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடும் 52 பெண்களை ஆய்வுக்கு உட்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கமாக பெண்கள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு தடையாக உள்ள காரணிகளை கண்டறிதல், மன்னார் மாவட்டத்தில் பெண் முயற்சியாளர்கள் உருவாகுவதை ஊக்குவித்தல், அதிகமான பெண்கள் நவீன தொழில் முறைகளை விடுத்து பாரம்பரிய தொழில்களில் ஈடுபடக் காரணம் என்ன என்பதை கண்டறிதல் என்பது பற்றியதாகும். ஆரம்ப காலங்களை விட இன்று பெண்கள் தனித்து ஒரு தொழிலை செய்யும் நிலை அதிகரித்துக்கொண்டு வருகின்றது ஆண்களைப் போல் பெண்கள் உடலளவில் பலம் குறைந்தவர்களாக காணப்பட்டாலும் மனதளவில் பலமானவர்களாக திகழ்கின்றனர். திருமணமான பின்பு பெண்கள் வீடுகளில் முடங்கிவிடும் நிலை மாறி இன்று குடும்ப சுமையுடன் பொருளாதார சுமையையும் சுமக்கின்றனர். பெண்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதாக சுயதொழில் காணப்படுகின்றது. சுயதொழிலானது இன்று பெண்கள் மத்தியில் இருந்த வறுமையை ஒழித்து

---

[170] University of Jaffna, Sri Lanka.
[171] Department of Economics, University of Jaffna, Sri Lanka.

பெண்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. இருந்த போதும் குறிப்பாக கிராமப்புறங்களில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்கள் தங்கள் சுயதொழில் வளர்ச்சியில் தனிப்பட்ட, குடும்ப, சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சவால்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர்.

**பிரதான சொற்கள்** : சுயதொழில், பெண்கள், தடைகள், நவீனம், பாரம்பிரயம்.

## அறிமுகம்

மனித இனத்தின் வரலாறு பொதுவாக ஆடவர் வரலாறாக அவர்களின் போர்கள் , ஆட்சிகள், வீழ்ச்சிகள், எண்ணங்கள் ஆகியவை பற்றியே எழுதப்பெற்று வந்துள்ளது. மனித இனத்தின் ஒருபாதியாகிய பெண்களைப் பற்றி ஒன்றும் பெரிதாக சொல்லாமல் விடுவது கற்பிப்போராலும் கற்போராலும் உணரப்படவில்லை. தற்போது நிலை மாறி பெண்கள் சமுதாயம் முன்னேறியுள்ளது. ஆண்களுக்கு நிகராக பெண்கள் கல்வித்தகுதியை பெற்றுள்ளனர். ஆண்களின் உலகம் என முத்திரை குத்தப்பட்ட பிரிவுகளான இராணுவம், காவல்துறை, அரசியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் என்று அனைத்து துறைகளிலும் புகுந்து வெற்றிக் கொடி நாட்டி வருகின்றனர். மேலும் இன்றைய காலத்துப் பெண்கள் நிச்சயம் தங்கள் மனோபலத்தாலும் அறிவினாலும் முயற்சியாலும் பல துறைகளிலும் காலடி எடுத்து வைத்து இன்று உலகம் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு முன்னிலைக்கு வர முயற்சிக்கின்றனர் என்றே கூறவேண்டும். ஆனால் முற்காலத்தில் பெண் என்பவள் தனது வீட்டை விட்டு வெளியே வந்து தொழில் முயற்சியில் ஈடுபடவோ தனது கருத்துக்களை உலகறிய செய்யவோ பாரிய தடைகள் காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் பெற்றோர்களும் ஆண்களும் பெண்ணின் துணிச்சலும் கல்வியும் அவள் சம்பாதிக்கும் செல்வமும் அவளது எதிர்காலத்தில் ஏற்பட நேரும் சோதனைகளை முறியடிக்கவல்ல ஆயுதங்கள் என்பதை உணர தொடங்கினர். இதன் விளைவாக உலகளவில் பெண்களின் பார்வையும் விரிவடையத் தொடங்கிவிட்டதை அவதானிக்கலாம்.ஒரு நாட்டில் சராசரியாக 50 சதவிகித மக்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். உலகில் வறுமையில் வாடும் 13 பில்லியன் மக்களில் 70 சதவிகிதத்தினர் பெண்களாவர். ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் மொத்த உற்பத்தி பெறுமானம் 60 சதவிகிதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 40 சதவிகிதப் பங்களிப்பை செய்யும் ஆண்கள் புனீ இல் 90 சதவிகிதத்தைப் பெற உள்நாட்டு உற்பத்திக்கு 60 வீத பங்களிப்பை செய்யும் பெண்கள் 10 சதவீதத்தினையே வருமானமாகப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. ஆண்களைவிட பெண்கள் முயற்சியாளர்களாக உருவாகின்ற போது அதனூடாக வீட்டுக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் நன்மை மிக உயர்வானதாகும். குறைவிருத்தி நாடுகளில் பெண்கள் முயற்சியாண்மையாளர்களாக உருவாகின்ற நிலை ஆண்களோடு ஒப்பிடும்போது மிகக் குறைவானதாகும். இவ்வாறு குறைவிருத்தி நாடுகளில் பெண் முயற்சியாளர்கள் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கு பின்வரும் அம்சங்கள் காரணங்களாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது அதிகளாவிலான விடயப்பரப்புக்களில் ஒரு முக்கியமான கருவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது சமூதாயங்கள் தகவல்களை பெறுவதற்கான அணுகல் வசதிகளை அதிகரிப்பதுடன் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களையும் விரிவுபடுத்துகின்றது.

## ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வு

ஆசிய அபிவிருத்தி வங்கி (2000) வறிய மக்களை அடிப்படையாக கொண்ட நுண்கடன், நுண்கடன் சேமிப்பு, நுண்காப்புறுதி, மற்றும் பணப்பரிமாற்றுகைகள் போன்ற நிதிச்சேவைகள் நுண்நிதி எனப்படும் என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

ளு.டீ. ளுயல(1803) ஒரு முயற்சியாளன் நிலம், உழைப்பு, மூலதனம், ஆகிய எல்லா உற்பத்திக் காரணிகளையும் இணைத்து உற்பத்தி செய்வர். இவர்கள் வளங்களை விலை குறைவாக உள்ள இடங்களில் இருந்து அவற்றை உற்பத்தித் திறன் மற்றும் விளைச்சல் உள்ள இடத்திற்கு மாற்றீடு செய்கின்றார்கள் என்கின்றார்.நெவநச னுசரஉமநச இன் வரைவிலக்கணத்தின் பிரகாரம் முயற்சியாண்மை எனப்படுவது சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கான கண்டுபிடிப்புக்களை உருவாக்கக்கூடிய ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பயனுள்ள மற்றும் நோக்கமுள்ள கண்டுபிடிப்புக்கள் முயற்சியாண்மை என அழைக்கப்படுகின்றன.னுநநிய ஏயைெலஇ னுளைலய ளுநைபொ (2015) ஆகியோரால் "ளவயவரள ஊழிந டிக றழஅநெ நவெசநிசநநெரசளாip" என்ற தலைப்பில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது முயற்சியாண்மையில் பெண்களின் பங்களிப்பை ஆராய்வதாக உள்ளது. இது ஓர் பண்புசார்ந்த ஆய்வு முறையாகும். இவ்வாய்வின் முடிவானதுகலந்துரையாடல், நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு பெறப்பட்டுள்ளது. சுயதொழிலில் ஈடுபடும் போது ஆண்களை விட பெண்களே சமூக,பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பது இவ்வாய்வின் முடிவாக காணப்படுகின்றது.

யுஅடிபையஇசுயஅயளயஅல ஆரசரபநளயெ (2013) என்பவர்களின் "றழஅநெ நவெசநிசநநெரசளாip ஙநளடழிஅநவெ ii inனயை" என்னும் ஆய்வின்படி 1990 களை விட இன்று நகரத்தில் உயர்ந்த மற்றும் நடுத்தர வர்க்க பெண்கள் மத்தியில் முயற்சியாண்மை பண்பு மிகவேகமாக பரவி பெண்கள் தொழில் முனைவோராக மாறி வருகின்றனர் என்பது இவ்வாய்வின் முடிவாகும். இது ஓர் பண்புசார்ந்த ஆய்வு முறையாகும். இவ்வாய்வின் முடிவானதுகலந்துரையாடல், நேர்காணல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

ஐசநநெ இவுயெ ஊாநற லுயெ (1991 ) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட " வுாந ஊாயபெiபெ "யவவநசெ டிக றழஅநெ நுவெசநிசநநெரசள : வுாந ளுiபெயிழசந நுஒிநசநைெஉந" என்னும் ஆய்வானது பண்புசார்ந்த ஆய்வு முறையாகும்.நேர்காணல்,கலந்துரையாடல்,நேரடி அவதானிப்பு போன்ற கருவிகள் தகவல்களை பெற பயன்படுத்தப்பட்டுள்ளது.தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்கள் மிகுந்த கல்வியறிவுடையவர்களாகவும், சேவைத்துறையில் கவனம் செலுத்துபவர்களாகவும், நடுத்தர வர்த்தகத்தினையும் அதிக எண்ணிக்கையானவர்கள் உயர்ந்த வளர்ச்சியுள்ள கைத்தொழில் நோக்கி நகர்பவர்களாகவும் இருப்பதும் சில பெண்கள் குடும்ப வியாபாரத்தை பார்ப்பவர்களாகவும் முக்கியத்துவம் குறைந்த பரம்பரை தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.துயலயறயசனயநெஇ (2016) "வுாந ஐளளரநள யுனெ ஊாயடடநபெநள குயஉநன டில றழஅநெ நுவெசநிசநநெரசள ஐள ளுசi டுயமெய" என்னும் தலைப்பில் தனது ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வானது பண்புசார்ந்த ஆய்வு முறையாகும். இவ் ஆய்விற்கான தரவுகள் கலந்துரையாடல், நேர்காணல் மூலம் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவானதுபெண்கள் தொழிலாளர்களை ஊக்கப்படுத்தி, வாடிக்கையாளர்களை தக்கவைத்து, தம் குடும்ப நலனுக்காக பெரும்பகுதியை முதலீடு செய்வதுடன், இலங்கையின் வர்த்தக அபிவிருத்திக்கென பெருமளவு பங்களிப்பையும் செய்கின்றனர் என்பதாக காணப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள பெண்கள் சுயதொழிலில் முயற்சியில் ஈடுபடும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக முன்வைக்கப்படும்

ஆய்வு அணுகுமுறையாக அளவுசார் மற்றும் பண்புசார் அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.இங்கு சுயதொழில் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு தொடர்பாக ஆய்வு செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு அளவு ரீதியாகவும் பண்புரீதியாகவும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளானவை வினாக்கொத்து வடிவில் ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் சுயதொழிலில்ஈடுபடும் பெண்களிடம் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள் திறந்த வினாக்களை உடையதாக அமைந்துள்ளது. வினாக்கொத்து டமைநச ளஉயடந ஸலளவநஅ ஆல் அமைக்கப்பட்டு முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன், நடுநிலைமை, ஏற்றுக்கொள்ளவில்லை, முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை எனும் ஒழுங்கு முறையில் சரியான தெரிவினை தெரிவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில வினாக்கள் ஆம் அல்லது இல்லை என்று தெரிவினை மேற்கொள்ளும் வினாக்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தினை வழங்கி பெறப்பட்ட தரவுகளுக்கு மேலதிகமாக தரவுகளினை பெறும் பொருட்டு ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர்,சமூர்த்தி உத்தியோகத்தர்கள், என்பவர்களிடம் நேரடியாக சென்று கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.ஆய்வுக்கு வேண்டிய முக்கியமான தரவுகளை பெறும் நோக்குடன் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத நேர்காணல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.மேலும் எத்தகைய காரணிகள் ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராமங்களில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களின் முயற்சிகளில் பங்களிப்பு செய்கின்றது. எக்காரணிகள் சுயதொழிலில் ஈடுபடுவதை தடுக்கின்றன என்பதை அறிவதற்கு வினக்கொத்து, நேர்காணல்,நேரடி அவதானிப்பு என்பன மூலம் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள்,ஆய்வுக்கட்டுரைகள்,சஞ்சிகைகள், புத்தகங்கள்,மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளாக காணபபடுகின்றன. இவ்வாய்வுக்கு தேவையான புள்ளிவிபரங்கள் மற்றும் முறைசார் தகவல்கள் மன்னார் பிரதேச செயலக அறிக்கை(2017), கிராம சேவையாளர் அறிக்கை, புத்தகங்கள்,இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகளாக பெறப்பட்டவையாகும்.ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிலுள்ள 6 கிராமங்களில்206 குடும்பங்கள் காணப்படுகின்றன. மொத்த சனத்தொகை 714 ஆகக் காணப்படுகினது, இதில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் 235 ஆகவும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 260 பேர் ஆகவும் உள்ளனர். ஆய்வின் இலக்கு குடி சுயதொழிலில் ஈடுபடும் பெண்களாகக் காணப்படுகின்றது.இங்கு சுயதொழிலில் ஈடுபடும் பெண்களின் தொகை 52 ஆகக் காணப்படுவதால் இலக்குக் குடியே ஆய்வின் மாதிரியாக எடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கிடையிலான தொடர்புகளை பரிசீலனை செய்வதற்வதற்காக ளுீளுளு கணினி மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் வகைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கருதுகோள் பரிசீலனையும் தரவுப்பகுப்பாய்வும்**

**ர்1. பெண் முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கு தனிப்பட்ட, குடும்ப , சமூக, மற்றும் பொருளாதார, காரணிகள் தடையாக இருக்கின்றன.**

பெண் முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்ற காரணிகளின் தரவுகளை நோக்கினால்

| | முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன | ஏற்றுக்கொள்கின்றேன் | நடுநிலைமை | ஏற்றுக்கொள்ளவில்லை | முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை |
|---|---|---|---|---|---|
| **தனிப்பட்ட காரணிகள்** | | | | | |
| ஆபத்தை எதிர் கொள்ளும் திறன் அதிகமுள்ளது | 11.5 | 17.3 | 36.5 | 34.6 | - |
| தன்னம்பிக்கை அதிகம் காணப்படுகின்றது | 30.8 | 51.9 | 17.3 | - | - |
| புத்தாக்க சிந்தனை அதிகம் காணப்படுகின்றது | - | 9.6 | 28.8 | 61.5 | - |
| தலைமைத்துவப் பண்பு அதிகமாக உள்ளது | - | 15.4 | 42.3 | 42.3 | - |
| **குடும்பக் காரணிகள்** | | | | | |
| திருமணம் சுயதொழிலில் வளர்ச்சிக்கு உதவுகின்றது. | 11.5 | 34.6 | 36.5 | 17.3 | - |
| குடும்ப சுமை தடையாக இல்லை | - | 21.2 | 46.2 | 32.7 | - |
| பேதப்படுத்தல் அதிகமாகக் காணப்படுகின்றது | - | 9.6 | 28.8 | 61.5 | - |
| குடும்ப கௌரவம் அதிகரிக்கின்றது | 36.5 | 34.6 | 28.8 | - | - |
| குடும்ப ஒத்துழைப்பு காணப்படுகின்றது | - | 21.2 | 69.2 | 9.6 | - |
| **சமூகக் காரணிகள்** | | | | | |
| சமூக அந்தஸ்து அதிகரிக்கின்றது | 36.5 | 34.6 | 28.8 | | |
| பாராட்டுக்கள் கடைக்கின்றன | | 25.0 | 75.0 | | |
| சமூக ஒத்துழைப்பு கிடைக்கின்றது | 34.6 | 42.3 | 23.1 | | |
| சாதிக் கட்டமைப்பு காணப்படுகின்றது | | | 13.5 | 36.5 | 50.0 |
| பால்நிலை சமத்துவம் அதிகமுள்ளது | 7.7 | 84.6 | 7.7 | | |
| **பொருளாதாரக் காரணிகள்** | | | | | |
| மூலதனம் அதிகமாகக் காணப்படுகின்றது | | 5.8 | 46.2 | 48.1 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேமிப்பு அதிகரிக்கின்றது | | | 25.0 | 75.0 | |
| முதலீடு அதிகரிக்கின்றது | | | 15.4 | 84.6 | |
| வட்டிவீதம் நியாயமாக காணப்படுகின்றது | | | 23.1 | 59.6 | 17.3 |
| கடனக்கான கால அளவுபோதுமானதாக உள்ளது | | | 3.8 | 7.7 | 88.5 |
| சந்தை வாய்ப்பு அதிகமுள்ளது | | 9.6 | 26.9 | 63.5 | |
| இடையீட்டாளர் ஊடுருவல் அதிகமாகக் காணப்படுகின்றது | | 71.2 | 19.2 | 19.2 | |
| ஏற்றுமதி அதிகரிக்கின்றது | | | 7.7 | 17.3 | 75.0 |

இப்புள்ளிவிபரவியல் ரீதியாக நோக்குகின்ற போது பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்கு சமூக மற்றும் குடும்பக் காரணிகள் தடையாகக் காணப்படவில்லை. பெண்களின் சுயதொழிலுக்கு குடும்பத்திலும் சமூகத்திலும் ஒத்துழைப்பு காணப்படுகன்றது. குடும்பக் காரணிகள் மற்றும் சமூகக் காரணிகள் சுயதொழில் வளர்ச்சியை அதிகதிக்கின்றது என்பதனை அதிகமானவர்கள் முழுமையாகவும் ஏற்றுக்கொள்கின்நார்கள், சிலர் ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் நடுநிலைமையாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தனிப்பட்ட, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் காரணிகள் சுயதொழில் வளர்ச்சியை அதிகரிக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .856[a] | .672 | .635 | .440 |

a. Predictors: (Constant), X4, X1, X2, X3

இங்கு சு$^2$ஹ்ரீ 067 ஆகக் காணப்படுவதால் 67மூ மானத் தடைகள் தனிப்பட்ட, குடும்ப, சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளால் ஏற்படுகின்றன. 37மூ மான தடைகள் ஏனைய காரணிகளால் ஏற்படுகின்றன.

**Coefficients[a]**

| Model | | Unstandardized Coefficients | | Standardized Coefficients | t | Sig. |
|---|---|---|---|---|---|---|
| | | B | Std. Error | Beta | | |
| 1 | (Constant) | -1.284 | .710 | | -1.809 | .007 |
| | X1 | .080 | .020 | .093 | 3.986 | .042 |
| | X2 | .097 | .022 | .460 | .120 | .108 |
| | X3 | .029 | .035 | .439 | .821 | .416 |
| | X4 | -.003 | .022 | -.013 | -4.315 | .000 |

a. Dependent Variable: income

SE = -1.284A+ .080PF+ .097FF+ .029SF+ -.003EF

.007+ .042+ .108+ .416+ .000

Y= A+ $\beta_2$PF+ $\beta_3$FF+ $\beta_4$SF+ $\beta_5$EF

Y = பெண்களின் சுயதொழில் வளர்ச்சி (வருமானம்),PF = தனிப்பட்ட காரணிகள்

FF = குடும்பக் காரணிகள், SF = சமூகக் காரணிகள், EF = பொருளாதாரக் காரணிகள்

பிற்செலவு பகுப்பாய்வு முடிவுகளை நோக்குகின்ற போது ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சார் மாறியில் சாரா மாறிகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி மாதிரியிலுள்ள பொருண்மை தன்மையினை நோக்கின் 5மூ பொருண்மை (0.05) தன்மையினை விட சிறியதாக இருப்பதால் மாதிரியிலுள்ள காரணிகள் பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்குத் (வருமானம்) தடையாக இருக்கின்றன என்ற கருதுகோள் ஏற்கப்படுகின்றது. ஆகவே தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் தனிப்பட்ட, பொருளாதார மாறிகள் பொருண்மையுள்ள வகையில் தாக்கம் செலுத்துகின்றது.

பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகள் எனும் இவ்வாய்வில் சார் மாறியான பெண்களின் வருமானத்தின் மீது சாரா மாறிகளான தனப்பட்ட காரணிகள் சார் மாறியில் பிற்செலவு குணக மதிப்பெண்ணின் பெறுமதி .042 ஆகவும் பொருளாதாரக் காரணிகள் சார் மாறியில் பிற்செலவு குணக மதிப்பெண்ணின் பெறுமதி .000 ஆகவும காணப்படுகின்றது. இக்காரணிகள் சுயதொழில் வளர்ச்சிக்கு தடையாகக் காணப்படுகின்றன. ஏனைய மாறிகளான குடும்பக் காரணி மாறிகளின் பொருண்மை மட்டம் .108 ஆகவும் சமூகக் காரணி மாறிகளின் பொருண்மை மட்டம்.416ஆகக் காணப்படுவதால் இவை பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்கு தடைகளாக இருக்கவில்லை.

**ர்2பெண்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவின்மை சுயதொழிலில் ஈடுபடுவதை குறைக்கின்றது**

| | முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன் | ஏற்றுக்கொள்கின்றேன் | நடுநிலைமை | ஏற்றுக்கொள்ளவில்லை | முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை |
|---|---|---|---|---|---|
| பாரம்பரிய தொழில் முறையாகக் காணப்படுகின்றது | - | 86.5 | 13.5 | - | - |
| கையடக்க தொலைபேசி மற்றும் கணினி பாவனை அதிகமுள்ளது | - | 1.9 | 23.1 | 3.8 | 71.2 |
| தகவல் கிடைப்பனவு அதிகரிக்கின்றது | - | 7.7 | 15.4 | 76.9 | - |
| மின்சார உபகரணங்களின் பாவனை அதிகமாகக் காணப்படுகின்றது | - | | 19.2 | 80.8 | - |
| தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது | | 11.5 | - | 78.8 | - |

கருதுகோள் இரண்டின் அடிப்படையில் புள்ளிவிபரவியல் ரீதியாக நோக்குகின்ற போது பெண்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவின்மையானது சுயதொழில் வளர்ச்சினைக் குறைக்கின்றது தொழில்நுட்ப அறிவு குறைவாக உள்ளபடியாலே கையடக்க தொலைபேசி மற்றும் கணினி பாவனை அதிகமுள்ளது,தகவல் கிடைப்பனவுஅதிகரிக்கின்றது,மின்சார உபகரணங்களின் பாவனை அதிகமாகக் காணப்படுகின்றது,தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்பதனை சுயதொழிலில் ஈடுபடும் பெண்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே தொழில்நுட்ப அறிவு இல்லாமை பெண்களின் சுயதொழில் முயற்சி வளர்ச்சியடைவதைத் தடுக்கின்றது

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .780[a] | .609 | .567 | .328 |

a. Predictors: (Constant),

சு ஸ்ரீ 0.609ஆகக் காணப்படுவதால் 60மூ மான தடைகள் பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்கு தொழில்நுட்ப அறிவின்மையால் ஏற்படுகின்றன. ஏனைய 40மூ மான தடைகள் ஏனைய காரணிகளால்ஏற்படுகின்றன.

**Coefficients[a]**

| Model | Unstandardized Coefficients | | Standardized Coefficients | t | Sig. |
|---|---|---|---|---|---|
| | B | Std. Error | Beta | | |
| (Constant) | 7.903 | .813 | | 9.723 | .000 |
| தொழில் முறை | -.644 | .102 | -.647 | -6.298 | .000 |
| தொழில்நுட்ப பயிற்சி | -.178 | .066 | -.278 | -2.715 | .009 |
| தொடர்பு சாதனங்களின் பாவனை | -.101 | .040 | -.269 | -2.515 | .015 |
| தகவல் கிடைக்கும் அளவு | -.404 | .066 | -.708 | -6.097 | .000 |
| இயந்திரங்களின் பாவனை | -.115 | .050 | -.236 | -2.315 | .025 |

$Y = A + \beta_2 EM + \beta_3 TP + \beta_4 CI + \beta_5 IA + \beta_6 MI$

SE = 7.903+ -.644 EM + -.178TP + -.101CI +-.404 IA+ -.115MI

.000+ .000 + .009 + .015 + .000 + .025

Y = பெண்களின் சுயதொழில் வளர்ச்சி (வருமானம்),EM = தொழில் முறை

TP = தொழில்நுட்ப பயிற்சி, CI = தொடர்பு சாதனங்களின் பாவனை

IA =தகவல் கிடைக்கும் அளவு,MI = இயந்திரங்களின் பாவனை

பிற்செலவு பகுப்பாய்வு முடிவுகளை நோக்குகின்ற போது ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சார் மாறியில் சாரா மாறிகள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி மாதிரியிலுள்ள பொருண்மை தன்மையினை நோக்கின் 5மூ பொருண்மை (0.05) தன்மையினை விட சிறியதாக இருப்பதால் மாதிரியிலுள்ள காரணிகளான தொழில்நுட்ப அறிவின்மை சுயதொழில் வளர்ச்சியைக் குறைக்கின்றது என்ற கருதுகோள் ஏற்கப்படுகின்றது. ஆகவே தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்கு தடையாக காணப்படுகின்றன. சார் மாறியான பெண்களின் வருமனத்தின் மீது சாராமாறிகளின் பிற்செலவு குணக மதிப்பெண்ணின் பெறுமதி 0.05 க்குகக் குறைவாகக் காணப்படுவதால் கருதுகோளோடு உறுதியான தொடர்பு உள்ளது.

## முடிவுரைகளும் பரிந்துரைகளும்

இன்று ஆண்களுக்கு நிகராக பெண்கள் அனைத்து துறையிலும் முன்னேறிக்கொண்டு வருகின்றனர். குடும்பத்திலும் பெண்களே பொருளாதார ரீதியில் பெரும் பங்குடையவர்களாக இன்று காணப்படுகின்றனர். இருந்த போதும் பெண்கள் தமக்கென சொந்த தொழிலை ஆரம்பிக்கும் போது அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு பல காரணிகள் தடைகளாக காணப்படுகின்றதை அவதானிக்கக் கூடியாதாக உள்ளது. இவ்வாறான ஒரு நிலைமையை ஓலைத்தொடுவாய் என்ற கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கிராங்களில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களினை அடிப்படையாகக் கொண்டு சுயதொழிலில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது, பெண்கள் சுயதொழிலில் ஈடுபடும் போது அவர்களின் வளர்ச்சிக்கு எவ்வாறான காரணிகள் தடையாக உள்ளன போன்றவை இவ் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது.மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்து நோக்குகின்ற போது ஓலைத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் பெண்கள் சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாகுவதற்கு குடும்ப, சமூக, காரணிகள் தடைகளாகக் காணப்படவில்லை. தனிப்பட்ட, பொருளாதார மற்றும் தொழிநுட்பக் காரணிகளே பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்குத் தடைகளாக காணப்படுகின்றன என்பது கண்டறியப்பட்டது. எனவே குறித்த ஆய்வு பிரதேசத்தில் பெண்களின் சுயதொழில் வளர்ச்சிக்கு தனிப்பட்ட, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப காரணிகள் தடைகளாக காணப்படுவதால் இவை சுயதொழில் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பினை குறைக்கின்றன என்பது ஆய்வின் இறுதி முடிவாக பெறப்பட்டது.

பெண்களின் சேமிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும் சேமிப்பினை முதலீடாக மாற்றவும் நடமாடும் சேமிப்பு வங்கித் திட்டத்தை இங்கு நடை முறைப்படுத்த வேண்டும். அல்லது கிராமிய பெண்கள் சேமிப்பு வங்கிகளை உருவாக்கி அதனை மாதர்சங்கங்கள் வழிநடத்தலாம். அத்துடன் அவர்களின் சேமிப்பினை மீள அளிக்கும் போது பணமாக வழங்காது குறித்த தொழிலுக்கான உபகரணங்களை வழங்குதல் வேண்டும்.இங்கு மீன்பிடி சார்ந்த விடயங்களில் பெண்களின் பங்கிளிப்பு குறைவாக உள்ளது. நிதி நிறுவனங்களால் கொடுக்கப்படும் மூலதனமானது சுயதொழில் வளர்ச்சிக்கு போதுமானதாக காணப்பட வேண்டும். தொழிலில் பருமனுக்கேற்பவே நிதிநிறுவனங்கள் பெண்களுக்கு கடனினை வழங்க வேண்டும். அத்துடன் நிதி நிறுவனங்கள் கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதத்தை நியாயமான வட்டி வீதமாக அறவிட வேண்டும். அறவிடப்படும் வட்டி வீதம் வறிய நிலையில் உள்ள பெண்களை மேலும் வறிய நிலைலக்கு தள்ளுவதாக அமைந்து விடக்கூடாது. இவ் வட்டி வீதமானது பெண்கள் சுயதொழிலை முன்னகர்த்தி செல்லக்கூடியாதாக

இருத்தல் வேண்டுமே தவிர வளர்ச்சியை பாதிப்பதாகவோ தற்கொலைக்கு தூண்டுவதாகவோ இருக்கக் கூடாது. நிதி நிறுவனங்கள் கொடுக்கும் கடனுக்கு நியாயமான வட்டியினை வழங்கி நியாயமான இலாபத்தை பெறக்கூடியதாக அமைவதோடு பெண்களிடம் நிதி நிறுவனங்கள் தங்கள் கடுமையான போக்கினை பிரயோகிப்பதை நிறுத்த வேண்டும். நிதிநிறுவனங்கள் கடனை மீள செலுத்தக்கூடியவாறு திரும்பச் செலுத்தும் காலத்தை நீடிக்க வேண்டும்.நிதிநிறுவனங்கள் கடனினை வழங்கியவுடன் அதனை மீளப்பெறுவது மட்டும் தான் தனது நோக்கம் என்று செயற்படாது கடன் பெற்ற பெண்களுக்கு அவர்கள் புதிதாக செய்யவிருக்கும் தொழிலுக்கான ஆலோசனைகள் அல்லது ஏற்கனவே உள்ள தொழிலை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் நுட்பமுறைகளையும் வழங்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


Bharthvajan, R. (2014). *"Women Entrepreneurs & Problems Of Women Entrepreneurs"*. Vol. 3, Issue 9, Chennai, India. International Journal of Innovative Research in Science, Engineering and Technology, Bharath University.

Deepa Vinay & Divya Singh. (2015). *"Status and Scope of Women Entrepreneurship"*. Department of Family Resource Management, G.B.Pant Agriculture University of Technology, India.pdf.

Ganga Tilakaratna & Upali Wickramasinghe. (2005). "*Microfinance in Sri lanka: A Household level Analisis of outreach and impact poverty*". Sri Lanka: Independence Avenue, Colombo 07.

Jayawardana,T. (2016).*"The Impact of Women Entrepreneurs in Business Development of Sri Lanka"*, Sri Lanka: proceedings of international conference, journals.

Kaushalya, A. & Dilani, H. (2014).*" female entrepreneurship and the role of business development services in promoting small and medim women entrepreneurs in Sri Lanka"*. The institute of policy studies of Sri Lanka and Oxfam international, Sri Lanka.

Kumudu Sumedha Sanjeewani. (2015). *"The Impact of Women Empowerment Programs on Upcountry Tea Estate Women in Sri Lanka"*,vol.2, International Journal of Scientific Research and Innovative Technology.

Mohamed Abdul Cader Salfiya Ummaha, and Athambawa Jamaldeenb,(2015), *"Entrepreneurial Development Issues and Challenges in Sri Lanka: A Case Study of Women-owned Businesses in Ampara District"*,4 th Annual International Research Conference,pdf.

Ranasinghe.S.B,(2009*)," Women Entrepreneurs of Sri Lanka: Contributory Factors to their Success"*, Vol.1.*Sri Lankan Journal of Humanities and Social Science.*

Rathiranee,Y.Semasinghe,D*,(2014), *"Empowering women entrepreneurs through Micro finance: Challenges and Scenarios – A study on Jaffna*

*District"*, 1st International Conference, Centre of Excellence for Scientific & Research Journalism.

Rathiranee.Y, Semasinghe.D,(2014),*"challenges facing by women in accessing credit from microfinance institutions in Sri Lanka",pdf*

Smith and Thurman (2007),*"Women's Empowerment and Microcredit: A Case Study from Rural Ghana"*, Athuor Manuscript.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2010).

நதிரா மரியசந்தனம், (2014),*"பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்"* பெண், தொகுதி:19, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,இல.55,லேடி மன்னிங் டிறைவ், மட்டக்களப்பு.

நித்தியா குணசேகரம், (2015),*"பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் சுயதொழில் கடன் பெறுகையின் பங்கு.*

நிரஞ்சினி.தி, (2017), "*நுண்கடன்களால் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள்: மட்டக்களப்பு பிரதெசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு*", கிழக்கு பழ்கலைக்கழகம்.